# நோயாளி தகவல் கையேடு

## [ACARBOSE]

### இந்த மருந்து எதற்கானது?

Acarbose நீரிழிவு நோய் சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படுகிறது. ஆரோக்கியமான உணவு, வழக்கமான உடற்பயிற்சி போன்ற வாழ்க்கைமுறை மாற்றங்களுடன் சேர்ந்து, இரத்தச் சர்க்கரை அளவைக் குறைப்பதற்கு இது துணை புரிகிறது. நமது உணவில் உள்ள மாவுச்சத்து எளிமையான சர்க்கரையாகச் செரிமானமாகும் வேகத்தை இது மெதுவடையச் செய்கிறது. மாவுச்சத்து என்பது ரொட்டி, நூடல்ஸ், உருளைக்கிழங்கு, அரிசி போன்ற மாவுப்பொருள் உணவு வகைகளில் காணப்படும் ஒரு விதமான ஊட்டச்சத்து. செரிமானக் குடலிலிருந்து சர்க்கரை உடலில் சேர்வது மெதுவடையும். இதனால், சாப்பாட்டுக்குப் பிறகு இரத்தச் சர்க்கரை உயராமல் தடுக்கப்படுகிறது.

### இந்த மருந்தை நான் எப்படி உட்கொள்ளவேண்டும் / பயன்படுத்தவேண்டும்?

சாப்பாட்டுக்குமுன் ஒரு குவளை நீருடன் மாத்திரையை முழுமையாக விழுங்குங்கள் அல்லது முதல் வாய் சாப்பாட்டுடன் மாத்திரையை மென்று சாப்பிடுங்கள்.

### இந்த மருந்தை நான் உட்கொள்ள / பயன்படுத்த தவறினால் என்ன செய்வது?

நீங்கள் ஒரு வேளைக்கான மருந்தை உட்கொள்ள மறந்துவிட்டால், அடுத்த சாப்பாட்டுக்குமுன் அடுத்த வேளைக்கான மருந்தை உட்கொள்ளுங்கள். தவறவிட்ட மருந்தை உட்கொள்ளவேண்டாம்.
தவறவிட்ட மருந்துக்காக இருமடங்கு அல்லது கூடுதல் மருந்து உட்கொள்ளவேண்டாம்.

### நான் என்னென்ன முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்?

பின்வருவன உங்களுக்குப் பொருந்தினால், உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரிடம் தெரியப்படுத்துங்கள்:

- இந்த மருந்துக்கு அல்லது இந்த மருந்திலுள்ள மற்ற உட்பொருட்களுக்கு ஒவ்வாமை இருக்கிறது
- நீங்கள் கர்ப்பமாக இருக்கிறீர்கள், கருவுறத் திட்டமிடுகிறீர்கள், அல்லது தாய்ப்பால் ஊட்டுகிறீர்கள்
- உங்களுக்கு இதயத்தில், சிறுநீரில் அல்லது கல்லீரலில் பிரச்சினைகள் உள்ளன
- நீங்கள் அடிக்கடி மதுபானம் குடிக்கிறீர்கள்
- உங்களுக்கு இடைவிட்ட குடல் அடைப்பு, பெருங்குடல் அழற்சி போன்ற நாட்பட்ட குடல் பிரச்சினைகள் உள்ளன

நீங்கள் சாப்பிடாமல் இருந்து இரத்தப் பரிசோதனை செய்யவேண்டும் என்று மருத்துவர் உங்களிடம் சொல்லியிருந்தால், இரத்தம் எடுக்கப்பட்டு, நீங்கள் சாப்பிடத் தயாராகும்வரை மருந்தை உட்கொள்ளவேண்டாம்.

### இந்த மருந்தின் பொதுவான பக்கவிளைவுகள் என்ன?

பக்கவிளைவுகளில் ஏதாவது கடுமையாகி தொல்லை கொடுத்தால், உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரிடம் ஆலோசனை நாடுங்கள்.

Acarbose மருந்தின் பொதுவான பக்கவிளைவுகளில் உள்ளடங்குவன:

- வயிற்றுப்பொருமல் (வாயு வெளியாகுதல்)
- வயிற்றில் அசௌகரியம், வீக்கம்
- வயிற்றுப்போக்கு

## நான் உடனடியாக மருத்துவக் கவனிப்பு நாடவேண்டிய அரிய, ஆனால் கடுமையான பக்கவிளைவுகள் என்ன?

மருந்து ஒவ்வாமையின் அறிகுறிகளில் பின்வருபவற்றுள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை உள்ளடங்கும்:

- முகத்தில் / கண்களில் / உதடுகளில் / நாக்கில் வீக்கம்
- மூச்சுத்திணறல்
- உடலெங்கும் தோல் அரிப்பு

இந்த அறிகுறிகள் ஏதேனும் உங்களுக்கு ஏற்பட்டால், நீங்கள் உடனடியாக மருந்தை நிறுத்திவிட்டு, உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரைப் பார்க்கச் செல்லவேண்டும்.

பின்வரும் கடுமையான பக்கவிளைவுகள் நேர்ந்தால், நீங்கள் உடனடியாக உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரைப் பார்க்கச் செல்லவேண்டும்:

- கல்லீரல் பிரச்சினைகள்: கறுமை நிற சிறுநீர் அல்லது வெளிர் நிற மலம், உங்கள் கண்கள் அல்லது சருமம் மஞ்சளாகுதல், கடுமையான பசியின்மை, வயிற்றுவலி, குமட்டல் அல்லது நீங்காத வாந்தி

## இந்த மருந்தை நான் உட்கொள்ளும்போது / பயன்படுத்தும்போது எந்தெந்த உணவை அல்லது மருந்தைத் தவிர்க்கவேண்டும்?

இந்த மருந்தை எடுத்துக்கொள்ளும் வேளையில் மது அருந்துவதைத் தவிர்க்கவேண்டும். ஏனென்றால், இரத்தச் சர்க்கரை அளவு குறையக்கூடிய அபாயம் அதிகரிக்கலாம்.

இந்த மருந்தை உட்கொள்ளும்போது சுக்ரோஸ் அல்லது கரும்புச்சீனி உள்ள உணவையும் பானங்களையும் தவிர்க்கவேண்டும். ஏனென்றால், பெருங்குடலில் மாவுச்சத்து செரிமானம் அதிகரித்து, வயிற்றில் அசௌகரியமும் வயிற்றுப்போக்கும் நேரலாம்.

## இந்த மருந்தை நான் எப்படி பத்திரப்படுத்தி வைக்கவேண்டும்?

சூரிய ஒளி நேரடியாகப் படாத, குளுமையான, ஈரமில்லாத இடத்தில் பத்திரப்படுத்தி வைக்கவேண்டும். இந்த மருந்து பிள்ளைகளின் கைக்கு எட்டாமல் இருக்கவேண்டும்.

## இந்த மருந்தைப் பாதுகாப்பான முறையில் வீசுவது எப்படி?

இந்த மருந்தை ஒரு கறுப்பு நிறக் குப்பைப் பையில் போட்டு, இறுக்கமாகக் கட்டிய பிறகு, குப்பைத்தொட்டியில் வீசவேண்டும்.

## பொறுப்புத்துறப்பு

*மேற்குறிப்பிடப்பட்ட பக்கவிளைவுகள் முழுமையாக ஏற்படக்கூடியவை அல்ல என்பதை கருத்தில் கொள்ளவும்.இம்மருந்தை எடுத்துக் கொள்வதால் தங்களுக்கு ஏதேனும் பக்க விளைவுகள் ஏற்பட்டது எனக் கருதினால் தங்களது மருத்துவர் அல்லது மருந்தகரிடம் கலந்து ஆலோசிக்கவும்.*

***பரிந்துரைக்கப்படும் அளவைவிட அதிக மருந்தை நீங்கள் உட்கொண்டால், உடனடியாக மருத்துவக் கவனிப்பு நாடுங்கள். இந்தப் பக்கத்தில் உள்ள தகவல்கள், உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரிடமிருந்து கிடைக்கும் தகவலுக்கு மாற்றாகாது. தயவுசெய்து, மேல்விவரம் அறிய உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரிடம் ஆலோசனை நாடுங்கள்.***

*இந்தக் கட்டுரை தேசிய மருந்து தகவல் பணிக்குழு உறுப்பினர்களால் சுகாதார அமைச்சின் ஆதரவோடு உருவாக்கப்பட்டது. இந்தப் பணிக்குழுவில் குழுமப் பங்காளிகள் (தேசிய சுகாதாரப் பராமரிப்புக் குழுமம், தேசியப் பல்கலைக்கழகச் சுகாதாரக் குழுமம், சிங்ஹெல்த்), சமூக மருந்துக்கடைகள் (கார்டியன், யூனிட்டி, வாட்சன்ஸ்), சிங்கப்பூர் மருந்தியல் சங்கம் ஆகியன உள்ளடங்குகின்றன. இந்த உள்ளடக்கம், மருந்துக்கடைகளிலும் சுகாதாரப் பராமரிப்பு நிலையங்களிலும் மருந்து கிடைக்குமா என்ற விநியோகத் தகவலைப் பிரதிபலிக்கவில்லை. இத்தகைய தகவலுக்கு, அந்தந்த நிலையங்களிடம் நீங்கள் கேட்டறியலாம்.*